தமிழியக்க வெளியீடு - க. தி. பி. 2009

மொழித்தூய்மை
தேவையா?

கொடுங்கடல் கொண்ட குமரிநன் னாடே
முதல்மாந்தன் தோன்றிய மூரிநா டென்ப
முதல்தாய் மொழியும் முதுதமி ழேயாம்
மதிபோன் றுலக விளக்கு —திருத்துறைக்கிழார்



நூலாக்கம்:
வி. பொ. பழனிவேலனார் (67)
(திருத்துறைக்கிழார்)

விலை] [ஓர் உருபா

இந்நூலாக்கியோர் வெளியிடவிருக்கும் பிற படைப்புகள்.

1. தமிழ் கற்போம்
2. திருத்துறைக்குறள்
3. களவும் கற்று மற
4. பண்டைத் தமிழர் பண்பாடு
5. நல்லாற்றுப்படை
6. இந்திய அரசியல் கண்ணோட்டம்
7. சாதிகளை ஒழிக்கும் வழிகள்
8. எம் வாழ்க்கைப்போர்
9. திருக்குறள் தேர்பொருளுரை
10. போலி மருத்துவன்
11. சீரழிந்த செந்தாமரை
12. தமிழ் வளர்ச்சிக்கோவை
13. அழிவும் ஆக்கமும்
14. பல்சுவைக் கட்டுரைகள்
15. பாடற்கோவை
16. வள்ளுவர் கண்ட தமிழகம் -(நாடகம்)
17. புதுமை உலகம் பிறந்தது -(நாடகம்)
18. ஒன்றுபட்டால்....
19. புதிய குமுகம் -(நாடகம்)
20. சிந்தனைப் பூங்கொத்து (இரண்டாம் பதிப்பு)

படையல்:

என் வளர்ப்புத் தந்தையும் மாமனுமாகிய விளக்குடி திரு. சி. சிங்காரம் அவர்கள், ஆருயிர்த் தாயார் பார்வதியம்மாள், தந்தை திரு. பொதியப்பன் அவர்கள், அருமை மகன் இளமாறன் ஆகியோர் நினைவாக இந்நூலைத் தமிழ் மக்கள் முன் படைக்கின்றேன்.

நன்றிக் கடனறிவிக்கை.

இந்நூல் அச்சிட்டு வெளியிட நன்கொடை நல்கியுதவிய தமிழ்ப் பேரன்பர்கட்கும், கடைப் பக்க விளம்பரங்கள் கொடுத்து உதவிய அன்பர்கட்கும், நன்கொடை தண்டுதல் செய்ய உடன்போந்து பல்லாற்றானும் உதவிய திரு. இரா. அருமருந்தலைவனுக்கும், பிறர்க்கும் எம் உளமார்ந்த நன்றிக்கடனை உரிமைப் பெறுத்துகிறோம்.

— ஆக்கியோன்

மொழித்தூய்மை தேவையா?

-வி. பொ. பழனிவேலனர்.

முன்னுரை:

இன்று மொழி வளம்பற்றியும், மொழித்தூய்மை பற்றியும் பலரும் பலவாறு மனம் போனபடி பேசுகின்றனர்.

சிலர், "மொழியென்பது கருத்துப் பரிமாற்றக் கருவிதானே! அது தூய்மையாகத்தான் இருக்கவேண்டுமென்பது பொருந்தாது; மக்கட்குப் புரிய வேண்டுமென்பதுதான் பொருத்தம்," என்கின்றனர். மற்றுஞ்சிலர் "வேற்று மொழிச் சொற்கள் கலந்து வழங்கினுல்தான் ஒரு மொழி வளரும்," என்கின்றனர். சிலர் மொழித்தூய்மை என்று விடாப்பிடியாக இருந்தால் மொழி ஒருவர்க்கும் புரியாததாகிப் பயில்வாரில்லாது போய் விடும்," என்கின்றனர். வேறுசிலர் "எந்த நோக்கத்திற்காக மொழி தோற்றுவிக்கப்பெற்றதோ அது நிறைவேருது போகும்; மாருக மக்கள் மத்தியில் வழங்கவேண்டிய மொழி ஏட்டளவில் இப்பொழுது சமற்கிருதம் இருப்பதுபோல இருக்கவேண்டிய நிலைதான் ஏற்படும்," என்கின்றனர். இங்ஙனம் பலரும் பலபடியாகப் பேசுகின்றனர்.

அத்தகையோர் இன்று பல்கி வருகின்றனர். மொழிப் புலவர் சிலரும் அக்குழுவில் சேர்ந்துள்ளனரே என்பதுதான் எமக்கு வேதனை தருவதொன்ரும். அத்தகு தமிழன்பர்கட்குத் தெளிவுறுத்துவான் வேண்டியே இச்சின்னூல் எழுந்தது. அன்பர்கள் பொறுக்க.

மொழித் தோற்றம் :

'மொழி' என்றால் சொல், பேசு எனப் பொருள்படும். முதன்முதல் தோன்றிய மாந்தனுக்குப் பேசத் தெரியாது. பேசவேண்டிய தேவையும் அவனுக்கில்லை; விலங்குகளோடு தானும் ஒரு விலங்காய் வாழ்ந்தான். நாளடைவில் ஒருவர், இருவராகி; இருவர் பலரான பிறகுதான் பேசவேண்டிய தேவையேற்பட்டது. எந்த மொழியும் அவர்கட்குத் தெரியாது. ஆகையால், கையினாலும், கண்ணாலும், வாயாலும் குறிகாட்டியும், நெளிவு, சுழிவு செய்தும், குரல் ஒலி செய்தும் தம் உளக் கருத்தை ஒருவர்க்கொருவர் உணர்த்தினர். கைச் சைகையால்தான் பெரும்பாலும் உளக் கருத்துணர்த்தினர்.

முதல் உயிரி அறுபது இலக்கம் ஆண்டுகட்கு முன் தோன்றிற்று; முதல் மாந்தன் இருபது இலக்கம் ஆண்டுகட்கு முன்தான் தோன்றினான்; நிலவுலகம் தோன்றி ஐந்நூறு கோடி ஆண்டுகளாயின, என நில நூல் வல்லுநர் கூறுகின்றனர்.

விலங்குகளைப் போன்று வாழ்ந்த மாந்தர் தம் காப்புக்காக மரக்கிளைகளிலும், மலைக்குகைகளிலும் இரவில் தங்கி இருந்தனர்.

மக்கட்டொகை பெருகப்பெருக கூட்டம் கூட்டமாக வேறுவேறு இடங்கட்குச் சென்று வதிந்தனர் காலம் செல்லச் செல்ல வாழ்க்கையில் பல மாறுதல்கள் உண்டாயின. குடும்ப வாழ்க்கை தொடங்கிற்று, மானங்காக்க தழைகளையும், மரப்பட்டைகளையும் பயன்படுத்தினர். பின்னர் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து மொழியின் தேவையை உணர்ந்தனர்.

எழுத்துகள் கண்டுபிடித்தனர். ஓலையில் எழுத்துகளை எழுதினர். எழுதப் பயன்பட்ட ஆணிக்கு எழுத்தாணி என்று பெயர். பனையோலையே பெரிதும் பயன்பட்டது. எழுதிய ஓலைகளின் தொகுப்புக்குச் சுவடி என்று பெயர். எல்லா நூல்களும் ஓலைச்சுவடிகளாகவே இருந்தன.

ஆங்கிலேயர் இந்த நாட்டிற்கு வந்த பின்னரே அச்சுப் பொறி வந்தது. தாளில் நூல்களை அச்சிட முற்பட்ட காலம் 18-ஆம் நூற்றாண்டு எனல் சாலும்.

தமிழின் இயல்பு:

முதல்முதல் மாந்தர் பேசிய மொழி யாது? முதல் மாந்தன் தோன்றிய நிலப்பகுதி யாது? என்பன ஆய்வுக்குரியன. ஆனால், இன்றைய ஆய்வுப்படி முதல் மாந்தன் தோன்றிய இடம் "இலெமூரியா" எனப்படுகின்ற குமரிக் கண்டமென்றும்; முதலில் மாந்தர் பேசிய மொழி "தமிழ்" என்றும் கூறப்படுகிறது.

தமிழ் என்னும் சொற்கு தம் நாட்டுமொழி, தனியாக ழகரத்தையுடையது எனப் பொருள் கூறியுள்ளார் மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர். புதுப்பொருள் பிறக்கவும் கூடும்.

தமிழ்; வண்டமிழ், ஒண்டமிழ், பைந்தமிழ், செந்தமிழ் தொல்தமிழ், தீந்தமிழ், தண்டமிழ், முத்தமிழ், அருந்தமிழ், இன்றமிழ் எனப் பலபடப் பாராட்டப்படுகின்றது.

தொன்மொழி முன்மொழி, முதன்மொழி தென்மொழி, செம்மொழி, உயர்மொழி, தனிமொழி, வன்மொழி மென்மொழி, நன்மொழி எனவும் புகழப்படுகின்றது.

இவற்றையெல்லாம் நோக்கும்போது தமிழ்மொழி உயர்வானமொழி, தனித்து இயங்கக்கூடிய மொழி, செம்மைப்படுத்தப்பெற்ற மொழி என்பது போதரும்.

"பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை மண்ணிடைப்பல இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!" எனப் பரஞ்சோதியார் பாராட்டியுளார் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சொல்வளஞ் பொருள்வளஞ் செறிந்த தொன்மொழி தமிழ். தமிழுக்கு ஈடான மொழி இல்வுலகில் எதுவுமில்லை எனலாம்.

பிற மொழிக் கலப்பை ஏற்காத மொழி தமிழ் ஒன்றே. அதனால், வடமொழிச் சொற்களை மிகுதியாகச் சேர்த்து வழங்கியமையால் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், ஆகிய மொழிகள் தோன்றின என்பது மொழி வல்லார் கண்ட முடிவு.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாள முந்து
ளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்''
எனப் பேராசிரியர் சுந்தரனார் பாடியுள்ளமை காண்க.

தமிழின் இயல்பு அறியாதவர்கள் தமிழில் பிறமொழி கலந்தால்தான் வளரும் என்கின்றனர். அவர்தம் மொழியறிவு அத்தகையது.

முத்தமிழ் வளர்த்த மூவரசர் :

தமிழ்மொழி தோன்றிய காலம் இன்னும் வரையறுக்கப்பெறவில்லை. பாண்டிய அரச மரபு தோன்றிய காலமும் வரையறுக்கப் பெறவில்லை.

சேர, சோழ பாண்டியர் என்ற மூவேந்தரும் தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகராம் தென்மதுரையில் தமிழ்க்கழகம் நிறுவப்பெற்றது. மூன்று கழகங்கள் அமைத்து முத்தமிழ் ஆய்ந்ததாகவும், அவற்றில் ஆயிரக்கணக்கான புலவர்கள் பங்கு கொண்டனர் என்றும் வரலாறு கூறுகிறது. முதல் கழகக் காலத் தமிழில் வேற்று மொழிகளின் வாடை கூட இல்லையெனலாம். இடைக் கழகக் காலமும் அப்படியே. கடைக் கழகக் காலத்தில் வேற்று மொழி வாடை வீசத் தொடங்கியது. வடமொழியாளர் தென்னகம் புகுந்தனர். அப்பொழுதுதான்

''வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாக் கும்மே''

என்று தொல்காப்பியர் கட்டுப்பாடுரைத்தார்.

தொல்காப்பியர் தமிழ்ச்சொற்கள் யாவும் பொருள் குறித்தன வென்றும், மொழிப்பொருள் காரணம் வெளிப்படையாக எல்லார்க்கும் தோன்ருதென்றும் கூறியுளார்.

ஆனல் நன்னூலாசிரியர் பவணந்தியார், வடமொழி மரபை யொட்டி, இடுகுறிப்பெயர் என்றும் காரணப்பெயரென்றும் கூறி யுளார். தமிழில் இடுகுறிப் பெயருண்டெனின் அஃது வடசொல்லாக விருக்கவேண்டும்.

முதல் கழகக் காலத்தில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் நூல்கள் இயற்றப்பெற்றன, அந்நூல்களில் ஒன்றுகூட இன்று கிடைத்திலது. இடைக் கழகத்து நூல்களும் இல்லையென்றே கூறலாம். கடற்கோள்களாலும், கறையானாலும், தீயினாலும், தமிழ்ப் பகைவராலும் அழிக்கப்பட்டுவிட்டன என்பர் ஆராய்ச்சி அறிஞர். கடைக் கழக நூல்கள் ஒருசிலவே எஞ்சியுள்ளனவெனலாம். கழகக் காலங் கட்குப்பின்னர் தோன்றிய நூல்களில் வடமொழிக் கலப்பு மிக்குளது.

வடமொழிக் கலப்பு :

ஆரியர் சிந்து ஆற்றுக்கரையில் முதலில் குடியேறினர். பிறகு தெற்கு நோக்கி வந்து தமிழ்நாட்டில் புகுந்தனர். அவர்களது தாய் மொழி சமற்கிருதம் என்பது. அம்மொழி பேசுவது மிகவும் கடுமை யானது. ஆகவே, அவர்கள் தமிழ் கற்றனர். தமிழ்மொழியைப் பேசத் தொடங்கிய ஆரியர் தம் மொழிச் சொற்களை மிகுதியாகச் சேர்த்தும். கொச்சையாகவும் பேசத் தொடங்கினர். தமிழ் எழுத்துகளின் வடிவை யொட்டி வடமொழியைப் புதுக்கி "கிரந்தம்" என்ற ஒரு மொழியை ஆக்கினர். தமிழ் எழுத்துகளுடன் கிரந்த எழுத்துகளாகிய "ஸ, ஹ, ஷ, க்ஷ," முதலியவற்றையும் சேர்த்துக்கொண்டு வடமொழிச் சொற் களை சரிக்குச்சரி கலந்து எழுத முற்பட்டனர். இந்த நடையை இலக் கண ஆசிரியர்கள் "மணிபவள" நடை என்றனர். இந்த நடையைப் பின்பற்றி வடமொழிப் புராணங்கள் பலவற்றைத் தமிழில் எழுதினர்.

சமற்கிருத மொழி கற்ற தமிழர் அம்மொழியிலிருந்த நூல்கள் பலவற்றைத் தமிழில் பெயர்த்தனர். பதினெண் புராணங்கள், இதிகாசங்கள், தமிழாக்கப்பட்டன.

வடமொழியில் வான்மீகி, வேதவியாசர் எழுதிய இராமாயணம், மாபாரதம் இரண்டையும் கம்பரும், வில்லிபுத்தூராரும் தமிழில் வழி நூல்களாகச் செய்தனர். வடமொழி எழுத்துகளை நீக்கினரேயன்றி, வடமொழிச் சொற்களை முழுமையாக நீக்கித் தமிழாக்கம் செய்ய வில்லை.

வடமொழிப் புராணக் கதைகள், இராமாயண, பாரதக் கதைகள் வேடிக்கையாகவும், வியப்பாகவும், தமிழ் மரபுக்குப் பொருந்தாதனவாகவும், அறிவுக்கு அப்பாற்பட்டனவாகவும் இருந்தமையால் யாவரும் படித்தனர். திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் போன்ற கட்டுக்கதைகளையும் பிற புலவர்கள் தமிழில் செய்தனர். அவையும் வியப்பூட்டுவனவாகவிருந்தமையின் ஆர்வமுடன் படித்தனர். இதனால் பல சமற்கிருதச் சொற்கள் வழக்காறுற்றன. படித்தவர், படிக்காதவர் என்ற வேறுபாடின்றி அனைத்துத் தமிழரும் இக்கதைகளை ஆர்வத்துடன் கேட்கவும், படிக்கவும் தொடங்கினர்.

இக்கதைகளைக் கேட்பதும், படிப்பதும் புண்ணியமென்றும் செய்த பாவமெல்லாம் பறந்தோடுமென்றும் கூறினர். இதை நம்பிய தமிழ் மக்கள் இவற்றைப் படிப்பதிலும், கேட்பதிலும் மிக்க ஆர்வங் காட்டினர். படித்தவர்கட்குப் பணம், பால், பழங்கொடுத்தும் இரவில் படிக்கச்சொல்லி முதியவர்கள் பலர் அமர்ந்து கேட்டனர். இதை எழுதுபவரும் அவ்வாறு படித்தவருள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இராம நாடகம், துரோபதை கதைகளை மக்கள் விரும்பிப் பார்த்தனர்; கேட்டனர். இவற்றால் சமற்கிருதச் சொற்கள் பல தமிழ்மக்கள் மனத்தில் பதிந்தன. அவற்றைப் பேச்சுவழக்கில் பயன்படுத்தவும் முற்பட்டனர். தமிழ்மக்கட்குப் புதிய மொழியில் "மோகம்" எப்பொழுதும் உண்டு. ஏனெனில் இன்று ஆங்கிலத்தில் பேசுவதும் எழுதுவதும்தான் பெருமை, மதிப்புக்குரியது என்று எண்ணும் தமிழ் மக்(கு)கள் எத்தனையோ பேர் உண்டன்றோ?

தமிழ் தவிர வேறு மொழியறியாத தமிழரிடையே சமற்கிருதம் பரவிய முறை இதுவே. இம் மொழிக்கலப்பு ஏற்படுமுன்பு வழங்கியது தூய தமிழே என அறிக.

பாரசிகம், உருது மொழிக் கலப்பு:

முசிலீம் அரசர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தனர். இசுலாமியர் ஆட்சி இந்தியாவில் பல்லாண்டுகள் நடந்தது. மாலிக்காபூர், திப்புசுல்தான் முதலிய முசிலிம் அரசர்கள் தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில் பல பாரசிக மொழிச் சொற்களும் தமிழில் கலக்கப்பட்டன. அரசு அலுவலகங்களில் அச்சொற்கள் மிகுதியும் பயன்படுத்தப்பட்டன.

அவையாவன: ஜில்லா, தாலுகா, கிராமம், கஜானு, தபால், நமூனு, ஜமீன்தார், தாணு, நகல், பிராது, டபேதார், அமீன், சிரஸ்ததார், டாணுக்காரன், டப்பா, டங்கா, டமாரம், பந்தோபஸ்து முதலிய பல சொற்கள் தமிழ்நாட்டில் வழக்குக்கு வந்தன ஏன்? இன்றும் இருக்கின்றன.

நாயக்க மன்னராட்சி:

சிலகாலம் தமிழகம் தெலுங்குநாட்டு நாயக்க மன்னர் ஆட்சிக்குட்பட்டது நாயக்க மன்னர்களுள் கிருட்டினதேவ ராயர் சிறந்தவர். பிறகு திருமலைநாயக்கர், இராணி மங்கம்மாள் ஆட்சியேற்பட்டது. அக்காலத்தில் தெலுங்கர் பலர் தமிழ்நாட்டில் குடியேறினர். தெலுங்கரசர் ஆட்சியால் தமிழ் கேடுறவில்லையெனினும் தமிழ் வளரவில்லை. வடமொழி, தெலுங்குமொழி முதன்மை பெற்றன. தெலுங்கு தமிழின் இளை மொழியாதலால் அதன் கலப்பால் தமிழ் கேடுறவில்லை யாயினும் சமற்கிருதச் சொற்களை அளவின்றித் தமிழில் கலந்து எழுதினர்; பேசினர் தமிழின் தூய்மை கவனம்பெற வில்லை; தமிழ் வளர்ச்சிபற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை.

பல்லவர், களப்பிரர் ஆட்சி:

தமிழ்நாடு பல்லாண்டுகாலம் பல்லவ அரசர்கள் ஆட்சியிலும், சில்லாண்டுகாலம் களப்பிரர் ஆட்சியிலும் இருந்தது. அப்பொழுதும் தமிழின் தூய்மை காக்கப்படவில்லை. வடமொழி நூல்கள் தமிழ்நாட்டில் செல்வாக்குப்பெற்றன. பல்லவ அரசர்கள் வடமொழிப் பற்று மிக்கவர்கள். ஆகையால் இராமாயணம், மாபாரதக் கதைகளை நாடகங்கள் மூலமும், கதைகள் சொல்லல் மூலமும் பரப்பினர். அப்பொழுது சமற்கிருத, கிரந்தச் சொற்களைத் தாராளமாகப் பயன்படுத்தினர்; இப்பொழுதும் அவ்வாறே செய்கின்றனர் என்பதை அனைவரும் அறிவர். தமிழில் வடமொழி மிகுதியாகக் கலந்தது.

பல்லவராட்சியில்தான் கோவில்கள் கட்டும் முறை வந்தது. மலைகளைக் குடைந்து கோவில்கள் கட்டியவர் பல்லவரே. பின்னர் ஏனைய அரசர்களும் கட்ட முற்பட்டனர். கோவில்களில் வடமொழி, கிரந்தத்தில் வழிபாடு செய்யப் பார்ப்பனர்களே அமர்த்தப்பட்டனர்.

தமிழ் மூவேந்தர்போல மொழிப்பற்றின்மையால் வட மொழிவாணர்க்கே முதன்மை கொடுத்தனர். வேத பாட சாலைகள் ஏற்படுத்தினர். வடமொழிப் பல்கலைக்கழகங்கள் நிறுவினர். வடமொழி தேவமொழி என்று பெருஞ்சிறப்புச் செய்தனர்.

சமண சமயம் தலைதூக்கியது. சமணர் - சைவர் சண்டைகள் உண்டாயின. இக்காலத்தில்தான் தேவாரம், திருவாசகம் முதலிய சைவ சமய இசைப் பாடல்கள் தோன்றின. புராணக் கதைகளில் கண்ட கற்பனைகளையெல்லாம் பாடல்களில் அமைத்துப் பாடினர். தேவப்பாடல்கள் எங்கும் முழங்கின. பன்னிருதிருமுறைகள் உருவாக்கப்பட்ட காலம் இதுவே. சமணப் பள்ளிகள் இருந்த இடங்களிலெல்லாம் சைவ வைணவக் கோயில்கள் கட்டப்பட்டன. திவ்யப்பிரபந்தம் என்ற வைணநூல் தோன்றிய காலமும் இதுவே. அறுபத்துமூன்று நாயன்மாரும், பன்னிரண்டு ஆழ்வாரும் தோன்றினர். சமற்கிருதம், கிரந்தம் தெய்வ வழிபாட்டுப் பாடல்களில் இடம்பெற்றன. அம்மொழிகளில் வழிபாட்டுப் பாடல் கற்ற ஆரியப் பார்ப்பனரே கோவில்களில் பூசார்த்திகளாக அமர்த்தப்பட்டனர். தமிழ்மொழி தெய்வ வழிபாட்டுக்குத் தகுதியற்றதென்று ஒதுக்கித்தள்ளப்பட்டது. இன்றும் அந்நிலைதான்.

ஆங்கிலக் கலப்பு :

பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி வந்தது. அஃது ஏறத்தாழ 150 ஆண்டுகள் நடைபெற்றது. ஆங்கிலம் கற்றவர்க்கே அரசுப்பணி என்றனர். அனைவரும் ஆங்கிலம் கற்கத் தொடங்கினர். தமிழர் பலர் தமிழ்கூட எழுதப் படிக்கத் தெரியாத

நிலை. ஆரியப் பார்ப்பனர் தாங்கள்தாம் இந்த நாட்டுக்குடி மக்கள் என்று ஆங்கிலேயரிடம் அறிமுகஞ் செய்துகொண்டு ஆங்கிலங்கற்று அனைத்துப் பணிகளிலும் அமர்ந்தனர். ஆங்கில நடை, உடை, நடப்புக்களை மேற்கொண்டனர். ஆங்கில மேலதிகாரிகட்கு அணுக்கப் பணியாளர்களாகவும், மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தனர்.

அவர்கள் சமற்கிருதம், பாரசிகம், உருது, ஆங்கிலம், முதலிய தமக்குத் தெரிந்த மொழிகளையெல்லாம் கலந்து எழுதினர்; பேசினர். தமிழ் வளர்ச்சிபற்றி அவர்கள் கவலைப் படவில்லை. இன்று அவர்கள் நடத்தும் செய்தி இதழ்களைப் படித்தாலே தெரிந்துகொள்ளலாம்.

ஆங்கிலேயர் இந்த நாட்டைவிட்டுப் போனாலும் ஆங்கிலம் போகாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அதுபோனால் அந்த இடத்தில் 'இந்தி' வந்து அமரும். இன்று ஆங்கிலம் கலந்துபேசாத தமிழர்களே இல்லையெனலாம். இந்தி வந்தால் அதையும் கலக்காமல் விடார்.

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் 'கவி' பாடும் என்றாற் போல தமிழர் வீட்டு மூதாட்டியும் ஆங்கிலம் பேசுகிறாள். அவ்வளவு தமிழ்மக்களிடம் ஆங்கிலம் விரவிவிட்டது.

சமற்கிருதம், பாரசிகம், உருது, ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கலந்து பேசாத தமிழரே இன்றில்லையெனலாம்.

படிக்காத, நகர்ப்புறத் தொடர்பில்லாத, சிற்றூர் களில் வாழ்கின்ற மக்களிடையேதான் தூய தமிழைக் கேட்டு மகிழ முடிகிறது. ஆங்கிலங்கற்ற தமிழரிடமும், அருநகர், பெருநகர்களில் வாழும் பெரியோர்களிடமும் கலப்பற்ற தமிழைக் காண்பதரிது.

இந்தி மொழிக் கலப்பு:

மக்களுக்குப் புரியும் மொழியில் பேசவேண்டும், எழுத

வேண்டும் என்று கூறும் அன்பர்களே, ஆங்கிலர் ஆட்சி போன 30 ஆண்டுகளில் எத்தனை இந்திச் சொற்களை மக்கள் அறிந்துள்ளனர். இது மக்கட்கு முன்னரே தெரிந்த மொழியா? புதிய மொழிதானே! நயாபைசா, ஜாகை, ரஜா, வாபஸ், லோக்சபா, ராஜ்யசபா, சஞ்சாய்கா, ராஜ் பவன், ராஷ்ட்ரபதி, ஜனாதிபதி. ஹரிஜன், ஜனநாயகம், சபா நாயகர், சமாச்சார், ராஜிநாமா, ஆகாஷ்வாணி, தூர தர்ஷன், சர்தார், நமஸ்தே, பாபுஜி, வந்தேமாதரம், பாரதம், பிரதமர், பிரச்னை, ஜனதா, பைசே முதலிய சொற்கள் தமிழ் மக்கள் முன்னரே அறிந்தவையா? இவற்றைக் கலந்தே செய்தித்தாள்களில் எழுதுகிறார்கள்; மேடைகளில் பேசுகின்றனர். மக்கள் எப்படிப் புரிந்துகொள்கின்றனர். மக்கள் மொழியில் (*Mass Media*) பேசாமல், ஏன்? தெரியாத சொற்களைப் பயன்படுத்துகிறீர்கள்? என்று எந்தத் தமிழராவது கேட்டதுண்டா? தூயதமிழில் பேசினால் மட்டும் புரியவில்லையென்கிறார் "தமிழர்".

வானொலி நிலையங்கள், செய்தித்தாட்கள், மேடைப் பேச்சாளர்கள் இவற்றைப் பரப்புகிறார்கள். மக்கள் மனத்தில் இடம்பெற்றுவிடுகின்றன. புரியாமலோ, புரிந்தோ மக்கள் பயன்படுத்துகின்றனர். அதுபோன்று எல்லாமும், எல்லாரும் தூயதமிழில் எழுதினால், பேசினால் ஏன் மக்கட்குப் புரியாது? இன்று பேசுபவர் எல்லாரும் சொற்களின் பொருள் தெரிந்து தான் பேசுகிறார்கள் என்று சொல்லமுடியுமா? எந்தச் சொல் லும் வழக்கத்தில் வந்தால் மக்கள் புரிந்துகொள்ளாமலா இருப்பர்? மற்றைய மொழிச் சொற்களை மட்டும் எப்படிப் புரிந்துகொண்டனர்; புரிந்துகொள்கின்றனர்?

இற்றைத் தமிழர் நிலை :

வேற்று மொழிவாணர் எவரும் தமிழரைப்போன்று மொழிப் பற்றற்றவராய் இரார். ஏனெனில், பேச்சுவழக்கில் இல்லாத சமற்கிருதத்தைத் தம் முன்னோர் மொழியாக

உடையவர்கள்கூட அம்மொழியை வளர்க்கவும், அதனைப் பேச்சுமொழியாக்கவும் அரும்பாடுபடுகிறார்கள் "அதில் அறிவியலிருக்கிறது; பிற அனைத்துமிருக்கின்றன; அதில் இல்லாததில்லை; அம்மொழி நூல்களை தஞ்சை கலைமகள் கூடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய்தான் ஆங்கிலேயரும், பிறரும் ஆய்ந்து அறிவியல் கண்டுபிடிப்புகளெல்லாம் கண்டார்கள்" என இட்டுக்கட்டியுரைக்கின்றனர். ஆனால், அவர்கள் அம்மொழியைத் தாய்மொழி என்று கூடக் கூறுவதில்லை. தமிழ்மொழியைத்தான் தாய்மொழி என்று எழுதுகின்றனர். தாய் பேசக்கூடிய மொழியாக அது இல்லை; இருப்பினும் அவர்கள் கட்டுப்பாடாக அம்மொழியை வளர்க்கவே பாடுபடுகின்றனர். இப்பொழுது மதுராந்தகத்தில் சமற்கிருத பல்கலைக்கழகம் நிறுவ முனைந்து செயல்பட்டு அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தியுளர். தமிழ்நாட்டில் ஒருதமிழ்பல்கலைக்கழகம் நிறுவ எந்தத்தமிழராவது முன் வருகிறாரா? திருவையாற்றில் உள்ளது சமற்கிருதக் கல்லூரியே. தமிழ் கற்பித்தாலும் தமிழ்க்கல்லூரி என்று பெயரில்லையே! எவனாவது இதை மாற்ற நினைத்தானா? தமிழனின் மொழிப்பற்று எத்தகையது பாருங்கள்! தமிழைத் தாய்மொழியென்று குறிப்பிடுபவர் வளர்க்க முயல்வது அவர்தம் மூதாதையர் மொழியே! தமிழன் தாய்மொழிப் பற்றோ, தந்தைமொழிப் பற்றோ அற்றவனென்பது வெள்ளிடை.

தமிழரோ, தாய் பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த போதே (கற்றுக்கொடுத்த) ஊட்டிய மொழியை வளம்படச்செய்ய முற்படாமல் "தமிழில் என்ன இருக்கிறது? தமிழில் பிற மொழி கலந்து பேசினால், எழுதினால் என்ன? தூயதமிழில்தான் பேசவேண்டுமா? மக்களுக்குப் புரியும்படி இருக்கவேண்டாமா?" என நம்மிடமே வழக்குரைக்கின்றனர். இந்த நிலை தமிழரிடமன்றி வேற்று மொழிக்காரர் எவரிடமும் இல்லை; இல்லை; இல்லவே இல்லை.

பிறமொழி கற்ற தமிழர் பலரின் மொழிப்பற்றின்மை காரணமாகத் தமிழ்த்தூய்மை கெட்டு வேற்று மொழிச் சொற்கள் கலந்தன என அறிக. இன்று தமிழில் எந்தெந்த மொழிச் சொற்கள் கலந்துள்ளனவென்று கண்டறிதல் எளிதன்று.

எந்தெந்த மொழிக்காரர் இந்த நாட்டை ஆண்டார்களோ

அவர் தம் மொழிகளெல்லாம் மக்களால் கலந்து பேசப்பட்டன; சிலர் எழுதியும் வருகின்றனர்.

படித்த சிலர் வடமொழியும், தென்மொழியும் இறைவனின் இரு கண்களெனக் கதை கட்டிவிட்டனர். கண்மூடித்தனமாகத் தமிழர் அப்படியே நம்பி வடமொழிச் சொற்களை விலக்காமல் ஏற்றனர்.

இன்று தமிழ்மக்கள் பேச்சில் தமிழ்ச்சொற்கள் 100க்கு 20கூட இரா. பலர்க்கு எது தமிழ்ச்சொல், எது வேற்றுமொழிச்சொல் என்று தெரியாது. அதுபற்றி தமிழர்க்கு அக்கறையேயில்லை. சமற்கிருத நூல்களையெல்லாம் அச்சிட்டு வெளியிட திருச்சி நகரில் ஒரு சமற்கிருத அச்சுக்கூடம் அண்மையில் நிறுவியுள்ளனர். அதற்கு ஆயிரக்கணக்கில் பொருளுதவியும் செய்துள்ளனர் என்பதையும் தமிழர் கவனத்திற்குக் கொணர்கிறோம். என்னே! அவர் தம் வழக்கற்ற மொழிப்பற்று.

தாய்மொழிப்பற்று :

தாய்மொழிப்பற்று என்றால் பிற மொழிகளை வெறுப்பது, அழிப்பது, ஒழிப்பது என்று பொருளல்ல. ஒருவர் எத்தனை மொழி வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் பல மொழி கற்றவர்களாயிருந்தாலும் தமிழில் எழுதினாலும், பேசினாலும் வேற்றுமொழி கலக்கமாட்டார்கள். ஆங்கிலத்தில் நூல்கள் எழுதினால் அதில் தமிழைக் கலந்து எழுதார். அவர்களைப்போன்று ஏனையோரும் இருக்கவேண்டும் என்பதே எம் வேணவா. எந்த மொழியில் எழுதினாலும், பேசினாலும் முழுமையாக அந்த மொழியையே பயன்படுத்த வேண்டும். தனக்குத் தெரிந்த எல்லா மொழிகளையும் கலந்து பேசவோ எழுதவோ கூடாது என்பதாம்.

தமிழ் நம் தாய்மொழி; தாய் ஊட்டிய பான்மொழி; அதைத் தாயைப் பேணுவது போன்று பேணவேண்டியது நம் கடமை; அதன் அழிவுக்கு வழி கோலுவது நன்றி கொன்ற செயலாகும். அதன் வளர்ச்சிக்குப் பாடாற்ற இயலாவிடினும் தளர்ச்சிக்கு வழி செய்யாமல் இருத்தல் நன்று. நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின். இஃது எம் வேண்டுகோள்.

தமிழ் மக்கள் அயலார் ஆட்சிக்காலத்தில் தமிழ்ப் பற்றற்றவராயினர் என்பதை அயன்மொழிக்காரர் இயற்றிய தமிழ் நூல்களால் அறியலாம்.

அயல்நாட்டாரும், அயல்மொழிக்காரரும் இயற்றிய தமிழ் நூல்கள் :

பிறமொழி வல்லுநர் பலர் தமிழ்மொழியைக் கற்றுப் புலமையெய்தினர். தமிழ் இலக்கியங்களேயும், இலக்கணங் களேயும் தம்தம் மொழிகளில் ஆக்கினர்; தம்மொழி இலக் கியங்களேத் தமிழில் பெயர்த்தனர். தமிழிலும் பல நூல்கள் இயற்றினர். அவற்றுள் சில வருமாறு :

சீறாப்புராணம், தேம்பாவணி, சதுரகராதி, ஒப்பியன் மொழி நூல், கிறித்தவமறை, இலக்கண வினு விடை, வீர சோழியம், திருக்குறள் (ஆங்கிலப் பெயர்ப்பு) முதலியன. இயற்றியவர்கள்: உமறுப்புலவர், வீரமாமுனிவர், இரண் டாம் தீர்த்தங்கரர், போப்பையர், கால்டுவெல் ஆகியோர்.

தமிழ் கற்ற சமற்கிருதப் புலவர் பலர் வடமொழி நூல்களேத் தமிழில் ஆக்கினர்; இன்றும் ஆக்கிவருகின்றனர். இராமாயணம், மாபாரதம், புராணங்கள், ஆகமங்கள், உப நிடதங்கள், பாடியங்கள், வேதங்கள், கைவல்யநவநீதம், கீதை முதலியன குறிப்பிடத்தக்கன. தமிழ் தாய்மொழி யென்று சொல்லிக்கொண்டு பேச்சுவழக்கிற்குப் பொருந்தாத தம் உண்மை முன்னுள் தாய்மொழியை வளர்ப்பதில் அக் கறை காட்டுகின்றனர். தமிழரோ, "தமிழில் என்ன இருக் கிறது? இதைக் கற்ருல் சோறு போடுமா? மொழி கருத்துப் பரிமாற்றக் கருவிதானே" என்கின்றனர் பண்டைப் புலவர் போன்றும், அயல்நாட்டுத் தமிழறிஞர் போன்றும் ஒரு தமிழ் நூல் கூட இயற்றும் திறனில்லாத் தமிழர் நிலே என்னே! கரைத்த புளியையே கரைக்கின்றனர்.

தமிழில் பிற மொழிச் சொற்கள் கலந்தால்......

தமிழ் வளம் பெறும் என்பார் பலருளர். ஆனால், உண்மை அதற்கு மாறானதே. தமிழில் பிற மொழிச் சொற்களைக் கலப்பதால் தமிழ் ஒருக்காலும் வளராது; அழியும்.

தன்னிடம் பொருளில்லாதவன் செலவுக்குக் கடன் வாங்க வேண்டியதுதான். ஆனால், நிரம்பச் செல்வம் வைத்திருப்பவன் பிறரிடம் கடன் பெறுவதுண்டா? கடன் கேட்டால் பிறர் பார்த்து நகைப்பர் அன்றோ?

தமிழ் சொல்வளம், பொருள்வளம் செறிந்த மொழி. அதனுடன் வேற்றுமொழிச் சொற்களைக் கலந்தால் அப்பொருளுள்ள தூய தமிழ்ச்சொற்கள் வழக்கற்றுப்போகும். அங்ஙனம் ஒவ்வொன்றாகப் போய்க்கொண்டே இருந்தால் தமிழ் எங்ஙனம் வளரும்? காட்டாகச் சில காண்பாம்: "ஆரம்பம், ஆச்சரியம், அதிர்ஷ்டம், இஷ்டம், கஷ்டம், நஷ்டம், புஸ்தகம், சந்தேகம், சந்தோஷம், பரிட்சை, விஷயம், சௌக்கியம், சௌரியம், சிரமம், சம்சாரம், சுகம்" ஆகிய வடசொற்கள் தமிழ் வழக்கில் வந்ததால் அவற்றுக்கு நேரான தூய தமிழ்ச் சொற்களான தொடக்கம், வியப்பு, வாய்ப்பு, விருப்பம், தொல்லை, இழப்பு, பொத்தகம், ஐயம், மகிழ்ச்சி, தேர்வு, புலனம் நலம், துன்பம், மனைவி, பெண், ஆண், செய்தி, இன்பம் ஆகியவை மக்கள் வழக்கிலிருந்து மறைந்துவிட்டன. இப்பொழுது சொல்லுங்கள்; பிற மொழிக் கலப்பால் தமிழ் வளருமா? பிற மொழி வளருமா? இங்ஙனம் பல்லாயிரம் வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்துள. இவற்றை எமது "தமிழ் கற்போம்" என்னும் நூலில் கண்டு தெளிக.

தமிழில் கலந்து இன்று தமிழ் படிக்காதவரும் பேசுகின்ற ஆங்கிலச் சொற்களும் பலவாம். சில சொற்களை

மட்டில் குறிப்பாம்: "சார், பேனா, கூப்பன், டிக்கட், ட்ரெயின், பஸ், ரயில், ரோடு, கார்டு, கவர், ஆபீஸ், ஆஸ்பத்திரி, நர்ஸ் டாக்டர், கேட், சினிமா, கோர்ட், லேட், ஸ்கூல், பாட்ரி, பெயிண்ட், விசில், சவுண்ட்," முதலியன. இவை வழக்கில் வந்தபின் ஐயா தூவல், சீட்டு, செலவுச்சீட்டு, தொடர் வண்டி, பேருந்து, சாலை, அட்டை, உறை, அலுவலகம், மருத்துவமனை, மருத்துவர், செவிலி, வழி, திரைப்படம், மன்றம், வெளிச்சம், பள்ளி, மின்கலம், வண்ணம், ஊதல், ஒலி முதலிய தமிழ்ச் சொற்கள் தேவையற்றன. மேற்கூறிய ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மக்கள் எப்பொழுது தெரிந்துகொண்டனர்? ஆங்கிலேயர் ஆட்சி வந்த பிறகுதானே! இவை மக்கட்குப் புரியாதென்று கலக்காமல் பேசினார்களா? படித்தவர் பேசியதைக் கேட்டுத் தெரிந்துகொண்டனரன்றோ? பலர்க்கு அச்சொற்களின் பொருள்கூடத் தெரியாது. ஆனால் வழக்கில் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு தமிழ் கற்றவர் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினால்தானே பிறர் பார்த்தும், காதால் கேட்டும் தாமும் பயன்படுத்தத் தொடங்குவர்? படிக்காத மக்கட்குத் தமிழ் வளர்ச்சிபற்றிய கவலையில்லை. தமிழே படிக்க, எழுத அறியாரன்றோ? கற்ற தமிழர்களே கடமையுணர்வுடையவராயிருத்தல் வேண்டும். பிறர்க்கு வழிகாட்டியாக, அதுவும் நல்ல வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே".

அறிவியல் கலைச் சொற்கள் :

இன்றைய அறிவியல் ஆய்வுகட்குரிய நேரிய தமிழ்ச் சொற்கள் இல்லையென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏன்? அறிவியல் ஆய்வுகள் செய்தவர், இப்பொழுது ஆய்வு செய்பவர் தமிழர்களா யிருந்தால்தானே தம் கண்டுபிடிப்புகட்குத் தமிழில் பெயரிடுவர்? தமிழில் விளக்கம் எழுதுவர்? தாய்மொழிப் பற்றுள்ள தமிழரா யிருந்தால்தான் தமிழில் எழுதுவார்; இன்றேல் ஆங்கிலத்திலோ, வேறு மொழியிலோதான் எழுதுவார். அதுதான் தமக்குப் பெருமை யென்று கருதுவர் தமிழர். ஆனால், தமிழர் என்ன கண்டுபிடித்தார்? வடமொழிப் புராணங்களைப் படித்து அக்கட்டுக்கதைகளை அரைகுறைத்

தமிழில் எழுதி தமிழ்மொழியையும், பண்டைத் தமிழ்ப் பண்பாட்டையும் கெடுக்கிறார்கள். அறிவியல் ஆய்வு செய்யும் அளவுக்குத் தமிழர்க்கு அறிவு இன்னும் செயல்படத் தொடங்கவில்லை. ஏன்?

மக்கிப்போன புராணக்கதைகளை இன்னும் கிளறிக்கொண்டு பட்டிமன்றங்களில் தொண்டை வறள மண்டை உருளக் கத்துகிறார்களே! அறிவியல் ஆய்வுக்கு அறிவு ஏது? நேரந்தான் ஏது?

யார் அறிவியல் ஆய்வு செய்தாலும், எந்த மொழியில் எழுதினாலும் அம்மொழிச் சொற்களை அப்படியே எடுத்தாளக்கூடாது. தமிழாக்கம் செய்தல்வேண்டும். ஆங்கிலமும், தமிழும், அறிவியலும் ஐயந்திரிபறக்கற்ற தமிழ்ப் பற்றுள்ள ஐவர் கொண்ட தமிழாக்கக்குழு ஒன்றினைத் தமிழகஅரசு அமைத்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதைக்கு அப்பொழுது கண்டுபிடிக்கும் அறிவியல் ஆய்வுகளை உடனுக்குடன் தமிழாக்கம் செய்துவிடல்வேண்டும். தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலேயே இந்தக் குழுவும் இருந்து செயல்படலாம். தூய தமிழறிவுள்ள ஒய்வுபெற்ற பேராசிரியர்களையே இக்குழு உறுப்பினர்களாக அமர்த்தல்வேண்டும். அவற்றை எல்லா ஏடுகளிலும் வெளியிடவேணடும்; வழக்கில் கொணரவேண்டும்; மக்களிடையே பரவச் செய்தல்வேண்டும்.

பேச்சு வழக்குத் தமிழ் :

மக்கள் பேசும் மொழியில் எழுதினால்தான், பேசினால்தான் அவர்கட்குப் புரியும் என்பவர் இன்று பலராகி வருகின்றனர். அவர்கள் முன் கீழ்க்கண்ட பேச்சுவழக்குச் சொற்களைப் படைக்கிறோம் அவ்வாறு எழுதினால், பேசினால் தமிழ் வளருமா? தளருமா? என்று கூறுவார்களாக.

மொவன், பொண்டாட்டி, மயன் பொம்புளை, ஆம்புளை, பொண்ணு, புள்ளை, போயிடிச்சி, வந்திடிச்சி, சொன்னிச்சி, பெயிட்டு வாரேன், சொன்னப்பலே, வந்தாப்லே, போனப்லே, மணியைப் போலே, சென்னேன், கோயி, நேக்கு, நோக்கு, நன்னாருக்கு, பேசறேள், ஆயிடுத்து. பயக்கம், வயக்கம், முழி, முயி, கோச்சிப்பே, அய்த்தை, கேக்கறே, பாக்கிறியா, வெச்சிக்கோ, காச்சிருக்கு, என்னாச்சும், பில்லு, புண்ணாக்கு, நாயி (நாழி), இஸ்துக்கினு, பொடை, தமிளர், கொடம் (குடம்), கொடை (குடை), டமரா, புடிச்சி, செவத்தில், சொவத்திலே, கொலை (குலை), நண்டாயீக்கிறியா. நாஸ்தா பண்ணு, பூட்டுவா. கொலைக்குது (குரைக்கிறது), மசி, வச்சான்,

பாஞ்சான், வெளக்கு, பொட்டி, குடு, எலே (இலே), வெலே (விலே) செலே (சிலே), நாக்காலி, மவன், மவன், நம்மன், நம்பளுக்கு. அம்புட்டு, போயிடுத்து முதலியன.

இதுவும் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டுளதெனவறிக. இங்ஙனம் மக்கள் மொழியில் பேசினுல்கூடக் குற்றமில்லே; எழுதினுல் தமிழ்மொழியின் நிலே என்னவாகும்? மிகவும் இழிநிலேயடைந்து இலக்கியம், இலக்கணம் தலே தடுமாறிக் கெட்டழியும். பண்டைய கழகக்கால இலக்கியவிலக்கணம் பயனற்றுப்போகும். இது தமிழர்கட்குப் புரியாதது ஏனே?

இன்று சில, ஏன்? பல, தமிழ் நாளேடுகள், கிழமை இதழகள். மாதிகைகள் பல மொழிச் சொற்களேயும் கலந்தே எழுதுகின்றன. தமிழில் ஒரு ''புதுப்பாணி'' நடையை உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. தமிழ் வளர்ச்சியில் அத்துணே அக்கறை! தூய தமிழில் வெளிவரும் ஒரு சில மாதிகைகளேயும் நகுதல் செய்கின்றன. தமிழர்களே தமக்குப் புரியாதென்று கூறி அவற்றைக் கையால்கூடத் தொடுவதில்லே. அதனுலன்ருே தன்மானம், தனித்தமிழ் இரண்டுக்கும் பாடாற்றிய ''மாணுக்கன்'' என்ற மாத இதழ் (1975 மார்ச்) தி. பி. 2006, கும்பத் திங்களுடன் நிறுத்தப்படவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாயிற்று! என்னே! தமிழர்களின் தமிழ்ப்பற்று.

தமிழன்பர்களுடைய அரவணேப்பும் நாளுக்குநாள் அருகிற்று; இழப்பும் பெருகிற்று. தமிழ்நடை புரியவில்லேயென்ற குற்றச்சாற்று பலராலும் மடல் வழியும், நேரிலும் கூறப்பட்டது. மாணுக்கன் மறைந்தான். ஐயகோ! தமிழர் நிலே இப்படியாகலாமா?

மக்(கு)கட்குப் புரியும் வழுச்சொற்களேயும், கொச்சைச் சொற்களேயும் கலந்து எழுதின் தமிழும் மக்குத் தமிழாகி மடிந்து போம் என்பதில் எட்டுணேயும் ஐயமில்லே. தமிழர் தமிழழிவைத் தான் விரும்புகிருர்களா? அல்லது தமிழ் வளர்ச்சியை விரும்புகிருர்களா? ஆயின், வழக்கிற்கு வருகின்ற புதிய பிற மொழிச் சொற்களேப் புரிந்துகொள்வதுபோல் தூய தமிழ்ச் சொற்களேயும் புரிந்துகொள்வது தமிழர் கடனும். தமிழ், தமிழர் என்ற நிலேகள் நிலேக்கவேண்டுமென்கிறீர்களா அல்லது அயல் மொழிக் கலப்பால் அழியவேண்டுமென்கிறீர்களா? எண்ணிப் பாருங்கள்.

தமிழர்கட்குத் தமிழ் புரியாவிட்டால்....?

தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கட்குத் தமிழ் (தூயதமிழ்)

புரியவில்லையென்று ஒதுக்கித் தள்ளினால் தமிழ் வேறு எங்கே அடைக்கலம் புகும்? எந்த மொழியினர் ஏற்பர்? எந்த நாட்டினர் ஏற்பர்? போற்றுவர்; பேணுவர்? கூறுவீர் தமிழரே!

தமிழரைப்போன்று தாய்மொழிப் பற்றற்றவர் இந்நிலவுலகில் எவரும் இரார் தம் தாய்மொழியை வளப்படுத்தவே ஒவ்வொருவரும் முயல்கின்றனர். தமிழ்நாட்டைத் தம் தாய்நாடாகவும் தமிழ் மொழியைத் தம் தாய்மொழியாகவுங்கொண்டு வாழ்கின்ற பிற மொழிக்காரர், பிறநாட்டுக்காரர் தம் இல்லங்களிலும், தம் குலத்தவருடனும் அவர்களது பண்டைய முன்னோர் மொழியிலேதான் பேசுகின்றனர். அதனை வளர்க்கத்தான் பாடுபடுகிறார்கள். அம்மொழியைச் சிலர் படித்து அம்மொழி நூல்களைத் தமிழில் எழுதிப் பிறரைப் படிக்கச் செய்கின்றனக், தமிழ் நூல்களைத் தம் மூதாதையர் மொழியில் பெயர்க்கின்றனர்.

''இந்தி'' மொழிக்காரர்களின் தாய்மொழிப்பற்று தமிழர்கட்கு இன்னும் வரவில்லையே! என ஏங்குகின்றோம். இந்தி மொழியை இந்தியா முழுமைக்கும் பொது மொழியாகவும், உலக ஒன்றிய நாடுகள் அமைப்பில் (U. N. O) ஒரு வழக்கு மொழியாகவும் ஆக்குவதற்கு "இந்தி"யர் படும்பாடு பெரிது! பெரிது!! ஏறத்தாழ நூறு கோடி உருபாவரை செலவு செய்து தம் மொழியை உலக அம்பலத்திலேற்ற முயல்கின்றனர். தமிழர்கட்கு இந்த எண்ணம்கூட எழாது. எழுந்தாலும் இன்னொரு குழுத் தமிழர் மொழி வெறியர்; பரந்த நோக்கமில்லாதவர் என்று குறை கூறுவர். இதுதான் இன்றைய தமிழர் நிலை.

அன்றியும் (சுத்த) தூயதமிழ் தமக்குப் புரியாதென்பர்; தூய தமிழ் நூல்களைப் படிக்காது ஒதுக்கிவிடுவர்; தமிழ் வளர்ச்சிக்குதவும், ''தமிழ் கற்போம்'', "மொழித் தூய்மை தேவையா?" என்னும் நூல்களை அச்சிட்டு வெளியிடக்கூடப் பொருளுதவப் பின்னடைகின்றனர் பலர். ஏன்? ஓடி ஒளிகின்றனர்.

தமிழர்தாம் தம் தாய்மொழியாகிய தூய(சுத்த) தமிழ் புரியாதென்பர்; வேற்று மொழிக்காரர் எவரும் தம் தாய்மொழி தூய்மையானது புரியாதென்று சொல்லவேமாட்டார். எவரும் சொல்லி யாம் கேட்டதில்லை தமிழரைத் தவிர.

ஏனெனில், அவர்கள் தம் தாய்மொழியில் நல்ல

புலமையெய்திய பிறகே வேற்றுமொழி கற்பர். பள்ளி, கல்லூரிகளில் தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பெறுகின்றனர். தமிழன் தமிழில் பாடங்கற்ருல் புரியாதென்பான்; வேற்றுமொழியில் கற்கவே முனேவான். இப்பொழுது புகுமுக வகுப்பில் எல்லாப் பாடங்களேயும் தமிழில் கற்பிப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆங்கிலத்தில் கற்பித்தால்தான் புரியும் என்கின்றனர். அத்தகையோர் அயல்நாடு சென்று படிக்கலாம்.

ஏனைய நாடுகளில் தாய்மொழியில் கல்வி கற்றவனுக்குத்தான் அரசுப் பணிகளில் முதலிடம்; ஆனுல், தமிழ்நாட்டில் அயல்மொழியில் பாடமோ, தொழிலோ கற்றவனுக்கே முதலிடம். தமிழ்மொழியில் பாடங் கற்கிறவர்கட்கு அரசு ஊக்கத்தொகை அளித்தும் பல தமிழர் முன்வருவதில்லே. ஏனெனில், தமிழில் கற்றவர்க்கு முதலிடமென்று அரசு அறிவிக்கவில்லே; வேலே கிடைக்காதே என்ற அச்சம். தமிழ் நாட்டில் தமிழ்வழி பயின்றவர்கட்கே அரசுப் பணியென ஆணேயிடவேண்டும்.

தமிழை எல்லா நிலேயிலும் வழக்குக்குக் கொண்டுவந்தால்தானே எல்லார்க்கும் புரியும். எங்கும் தமிழ்; எல்லாந் தமிழில் என்ற நிலே வரல் வேண்டும். தமிழ்நாட்டில் என்று வருமோ?

தமிழ்நாட்டு அரசுப் பணிகளில் இருப்பவர்கள் எந்த நாட்டினர்; எந்த மொழியினராயினும் தமிழில் புலமை பெற்றிருக்க வேண்டுமென்று அரசு சட்டம் செய்தல் வேண்டும். குறைந்த அளவு இளம்புலவர் (Tamil Vidwan Preliminary) தேறியவராயிருத்தல் கட்டாயமாக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் முதன்மொழி, ஆட்சிமொழி என்பதற்குப் பொருளுண்டு; பயனுமுண்டு. தூய தமிழ் எல்லாத் துறைகளிலும் நடைமுறைக்கு வர தமிழ்ப்புலமை பெற்றவரைப் பதவிகளில் அமர்த்தல்வேண்டும். எல்லா

நடவடிக்கைகளும் தூய தமிழில் நடைபெறவேண்டும். அன்றுதான் தனித்தமிழ் தமிழ்நாட்டில் ஆளுமைபெறும். தமிழக அரசின் கடமை இது.

தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கட்கோ, பிறர்க்கோ தூய தமிழ் புரியவில்லையென்பதற்காக வேற்றுமொழிச் சொற்களைச் சேர்த்து எழுதி தமிழ்க்கொலை புரியாதீர்கள். தமிழை ஒழித்துவிடாதீர்கள்.

தனித்தமிழில் பண்டு பேசிய தமிழர் எங்ஙனம் வேற்றுமொழிச் சொற்களைப் புரிந்துகொண்டனர்? எவ்வளவு கடுமையான சொல்லாயினும், எளிய சொல்லாயினும் வழக்கிற் கொண்டுவந்தால்தான் மக்கள் மன்றில் செல்வாக்குப் பெறும் என அறிக.

இன்றைய புதுமைப் பாவலர் ("கவிஞர்").

இன்று "கவிஞர்" என்று பலர் புற்றீசல்போல் புறப்பட்டுக்கொண்டேயிருக்கின்றனர். அரைகுறைத் தமிழறிவு கொண்டு அம்பலமேறி, அனைத்து மொழியும் கலந்து பாடி, கேட்பவர்க்கு நகைச்சுவையூட்டி, தமிழ்க்கொலை செய்கின்றனர். அத்தகையோர்க்குத்தான் இன்று மிகுந்த வரவேற்பு கிடைக்கின்றது. இவர்களால் தமிழ் எங்ஙனம் வாழும், வளரும்? இனிய தமிழ்ச்சொல் இருக்கவேண்டியவிடத்தில் வேற்றுமொழிச் சொல்லை வைத்து அத்தமிழ்ச்சொல்லை வழக்கற்றுப் போகச்செய்கின்றனர். இப்பொழுது சொல்லுங்கள் இவர்கள் தமிழ்க்கொலைஞரா? இல்லையா? இவர்கள் செயல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.

எந்தச் சொல்லும் புழக்கத்திற்கு வந்தால்தான் அது பழக்கமாகி, வழக்க்மாகி, ஒழுக்கமாகும். பலரும்பயன் படுத்துவர்.

இது புரியாது; அது தெரியாது; இது கடுமையானது அது கொடுமையானது என்று தட்டிக்கழித்துவிட்டு, அறியா

மக்கட்குப் புரியவேண்டுமென்பதற்காக அவர்கள் பொருள் புரியாது பயன்படுத்தும் கொச்சைச் சொல்லே; அதுவும், வேற்றுமொழிச் சொல்லைப் பயன்படுத்தினால் எந்த மொழியும் வளராது.

மொழியறிவே இல்லாதவர்கட்குப் புரிய வேண்டும் என்பதற்காகப் பொருள் செறிந்த தூய தமிழ்ச் சொற்களை விலக்குதல் பொருந்தாது. இப்படியே பல தமிழ்ச் சொற்களையும் புரியாது, புரியாது என்று சொல்லி நீக்கிக்கொண்டே போனால் எஞ்சுவன கொச்சைச் சொற்களும் பிறமொழிச் சொற்களுமேயாம்.

பின்னர் அம்மொழியின் நிலை யாதாகும்? அதன் தூய்மை கெட்டு, மேன்மை கெட்டு, பான்மை கெட்டு, இலக்கிய இலக்கண வரம்பு கெட்டு இறுதியில் அழிந்தே போகும் என்பதைத் தமிழறிஞர் ஆய்ந்தறிக.

இன்றைய சென்னை நகர மக்கள், கல்வியறிவில்லாத குடிசைவாழ் மக்கள், பேசும் மொழிகளை அறிந்தவர்கட்குத் தெரியும் அவர்கள் வாயிலகப்பட்டுத் தமிழ் என்ன பாடுபடுகிறதென்று. இதை நேரில் கண்ட எவரும் தமிழ்மொழியைத் தூய்மையாக்கக்கூடாது; மக்கள் பேசும் மொழியாக்கவேண்டும் என்று சொல்ல முன்வாரார்.

தமிழில் எளிய இனிய சொற்கள் இல்லையா? அவற்றைப் பயன்படுத்திப் புரியவைக்கக்கூடாதா? ''இசுத்துக்கிணே'' போன்ற சொற்களைப் பயன்படுத்தித்தான் புரியவைக்கவேண்டுமா?

இன்று இந்திய நடுவரசு ''இந்தி'' மொழியை இந்தியாவின் பொதுமொழியாக்க முயன்றுவருகிறது. அம்மொழி அனைத்திந்திய ஆட்சிமொழியாவதற்கு முன்னரே, ''ஆகாஷ்வாணி, தூரதர்ஷன், லோக்சபா, ராஜ்யசபா, சபாநாயகர், ஜனாதிபதி, ஜனநாயகம், சஞ்சாய்க்கா, பாரதப் பிரதமர்'' போன்ற சொற்கள் வழக்கில் வந்துகொண்டேயிருக்கின்றன.

"இந்திபிரேமி மண்டல்," எங்கும் தோற்றுவித்து இலவயமாக இந்தி கற்றுக்கொடுக்கப்படுகிறது. நடுவரசின் ஆளுகையிலுள்ள அஞ்சற்றுறை, இருப்புப்பாதைத்துறை முதலியவற்றின் மூலம் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல் இந்தி புகுத்தப்படுவதையும் நாம் அறிவோம். மேற்கண்ட சொற்கள் யாவும் தமிழர்க்கு முன்னரே தெரிந்த, புரிந்த சொற்களா? எப்பொழுது? எப்படி? வழக்கில் வந்தன? இச்சொற்களை எங்ஙனம் புரிந்துகொள்கின்றனர்? வானொலி, செய்தித்தாள்கள், மேடைப்பேச்சு வாயிலாகக் கேட்டும் பார்த்தும் தாமே தெரிந்துகொண்டனர்; புரிந்துகொண்டனர். இவ்வாறு தூயதமிழ்ச் சொற்களையும் பயன்படுத்தினால் தமிழ் மக்கட்குப் புரியாமலாபோய்விடும்? புரியாதென்பார் புரியாதவரே. 'இந்தி'' மொழி இன்னும் எண்ணூறுண்டும், ஆங்கிலம் ஆயிரம் ஆண்டுந்தாம் வாழும் என்கின்றனர் மொழி நூல் வல்லார். ஆனால், தமிழ் முதல் தாய்மொழியாதலால் கன்னிமை கெடாது என்றும் நின்று நிலவும் என்கின்றனர். தமிழர் இதை அறிந்து நடக்க.

முடிப்புரை :

ஒரு இனத்தார் நாகரிகம், பண்பாடுகளை அறியக் கருவியாய் இருப்பது அவ்வினத்தார் தாய்மொழியே என்பது மொழிநூல் வல்லுநர் கண்ட முடிவு. அதுபோன்று தமிழினத்தின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறியக்கூடிய, அறிவிக்கக்கூடிய சிறந்த கருவியாக இருப்பது நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியே.

இன்று மொழிவழிதான் ஒவ்வொரு நாட்டின் பெயரும் அமைந்துள்ளது. மொழியழிவு நாட்டழிவுக்கே வழிவகுக்கும். தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாடு வடவேங்கடமலை (திருப்பதி) வரை பரவியிருந்தது. இன்று வடசென்னைவரை குறுகி பதினைந்து மாவட்டங்களுக்குள் அடங்கிக் கிடக்கிறது. பண்டு வடக்கே பனிமலைவரை பரவியிருந்ததாக வரலாறு கூறுகிறது. குமரிமுனைக்குத் தெற்கே எழுநூற்றுக்காவதம் தமிழ்நாடு பரவியிருந்ததென்றும் தமிழ் இலக்கியங்கள்

பகர்கின்றன. அது கடைக்கொள்ளப்பட்டது. தமிழரது ஏமாளித்தனத்தாலும், கருத்தின்மை, கவலையின்மையாலும் தமிழ்நாடு இன்று இந்நிலைக்குள்ளாகியுள்ளது.

ஆதலால், தமிழ் மகனே, தமிழ் மகளே, எத்தனை மொழி வேண்டுமாயினும் கற்றுக்கொள்க. ஆனல், உம் தாய்மொழியில் பேசும் போதும், எழுதும்போதும் அம்மொழியிலேயே முழுமையாகச் செய்க, உமக்குத் தெரிந்த மொழிச் சொற்களையெல்லாம் கலந்து எழுதாதீர்; தாயைக் களங்கப்படுத்தாதீர்: உம் தாய்மொழி சொல்வளம், பொருள் வளம் நிறைந்த செம்மொழி, தொன்மொழி; அதன் தூய்மை கெடச் செய்யாதீர். தன்மானமுள்ள தமிழராயிரும்; நன்றிகெட்டவராயிராதீர். இந்திய விடுதலைக்குப்பின் உம் கணிதமுறையெல்லாம் போய் "பைசா, கிலோ, லிட்டர், மீட்டர், குவிண்டால், கிராம்" முதலன வந்துள. இனி தமிழே மாற்றமுறினும் உறலாம். தூங்கற்க; விழித்தெழுக; செயல்படுக.

ஒருவன் தன் உள்ளக் கருத்தை உள்ளபடி உரைக்க உதவுவது அவன் தாய்மொழியே என்பது மொழிநூல் வல்லார் முடிவு. உனக்கு மட்டில் உம் தாய்மொழியில் பேசுவது புரியாதென்பது வியப்பாகவும், வேதனையாகவும் இருக்கிறது. தாய்மொழியைக் குலைத்து, நாய் மொழியை வளர்க்க முனையும் நன்றி கொன்ற செயலைக் கைவிடுக. தாய்க்கு உம் நன்றிக்கடனைச் செய்க. போலி ஆரவாரத்தில் ஈடுபட்டுப் பல மொழிச் சொற்களையும் உம் தாய்மொழியில் கலந்து தூய்மையைக் கெடுத்து அழிவுக்கு வழி கோலாதீர். தூயதமிழில் பேசுபவரையும், எழுதுபவரையும் நகுதல் செய்யாதீர். உமக்குத் தமிழ் தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்க. தமிழறிவும், தமிழ்ப்பற்றுமுள்ள தமிழறிஞர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்க. உமக்குத் தமிழ்ச் சொற்கள் தெரியவில்லையென்பதற்காகத் தாய் தமிழைக் கெடுக்காதீர். வேற்றுமொழிச் சொற்களை எப்படித் தெரிந்துகொண்டீரோ, அப்படியே தமிழ்ச் சொற்களையும் தெரிந்துகொள்க. குறுக்குமறுக்காகப் பேசி தாய்மொழி யழிவுக்கு வழியுண்டாக்காதீர். இன்று தமிழிசை போய் கருநாடக இசை அவ்விடத்தில் அமர்ந்துவிட்டது. காரணம் தமிழரின் ஏமாளித்தனமே.

தாய்க்குச் செய்யும் நன்றிக்கடனை மறவாத நன்மக்களாக இருங்கள். நன்றி கொன்ற மக்களாகாதீர். பயிர்கள் செழித்து வளரக்

களையெடுப்பது போன்று தமிழ்ப்பயிர் தழைத்து வளரப் பிறமொழிச் சொற்களாகிய களைகளைக் களைந்தெறியவேண்டும் என்பதை மறவாதீர். உம் பெயரையும்: உம் மக்கள் பெயரையும், உம் தொழில் நிறுவனப் பெயரையும், ஊர்ப் பெயரையும் தமிழில் வைக்க. பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதுவதாகச் சொல்லி பிறமொழிச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களால் எழுதிவிட்டால் தமிழாகிவிடாது. தமிழ்ச்சொல்லைத் தமிழ் எழுத்துகளால் எழுது. பிறமொழிச் சொல்லை அம்மொழியிலேயே எழுது. பிழைப்புக்காகத் தமிழ் கற்றோம் என்பவர் தமிழுக்குப் பிழை செய்யாதீர். வளர்ச்சிக்குப் பாடாற்ற இயலாவிடினும் அழிவுக்குத் துணையாகாதீர். தமிழைத் தாய்மொழியாக உடையவர் இங்ஙனங் கூறுவது நன்றி கெட்ட செயலாகும் என ஓர்க. தமிழைக் குறை கூறிப் பிற மொழி வளர வழிவகை செய்யாதீர். பிற இலக்கண வரம்பிலா மொழிபோல், இலக்கிய வளமிலா மொழிபோல் பிற மொழிச் சொற்களைத் தமிழ் ஏலாது. ஏனெனில், தமிழ் உயர்தனிச் செம்மொழி. உலகில் முதலில் தோன்றிய மொழி தமிழே. காலங் கடந்த முதுமொழி. எனவே, அதன் புனிதத் தன்மைக்கு இழுக்குண்டாகும் புன்மகாராக இராது, நன்மகாராக நடந்து கொள்வீராக. வெல்க தமிழ்!

முதன்மைத்தன்மை வாய்ந்தது, முப்பதெழுத்தே உள்ளது,
உலகம் போற்ற வாழ்ந்தது, உயர்ந்த தன்மை உடையது,
தனித்தியங்க வல்லது, தனக்குநே ரில்லாதது,
செம்மைப்பட்ட செம்மொழி, திண்மைப்பட்ட நுண்மொழி,
சொல்வளம் பொருள்வளம் செறிந்த நல்ல சீர்மொழி,
ஒரு பொருளில் பல சொலும் பல பொருளில் ஒரு சொலும்
மலிந்த மாண்பு பெற்றது, மக்கள் அணைப்பு பெற்றது,
ஒரெழுத்து ஒரு மொழி, ஒரெழுத்து ஒருவொலி,
ஒரு சொற்கு ஒரு பலுக்கல், உள்ள நல்ல உயிர்மொழி,
தக்கோர் போற்றும் தனிமொழி, தகுதி மிக்க "தமிழ் மொழி".